# சாதி அடையாளமும் சேவைகளுக்கான அணுகளும்: யாழ்ப்பாணத்தில் நடாத்தப்பட்ட ஆய்வின் கண்டறிவுகள்



புகைப்படம் - காயத்ரி லொகுகே

## நிறைவேற்றுச் சுருக்கம்

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததிலிருந்து, வடக்கு மக்களுக்கு நீர், சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற சேவைகள் எவ்வாறு வழங்கப்படுகின்றன, மற்றும் எவ்வாறு அணுகப்படுகின்றன என்பது தொடர்பாக மிகவும் குறைவாகவே அறியப்பட்டுள்ளது. வகுப்பு மற்றும் சாதி மாற்றங்களின் புரிந்துணர்வானது அத்தகைய சேவைகளைப் பெற்றுக்கொள்வதில் பங்களிப்பு செய்யலாம் என்பதும் மிகக் குறைவாகவே அறியப்பட்டுள்ளது. இத்தகைய நிலையில், ஒடுக்கப்பட்ட மக்களுக்கு எவ்வாறு நெகிழ்திறன் வாய்ந்த வாழ்வாதாரங்களை உருவாக்க முடியும் என்பதைப் புரிந்துகொள்வது கடினமாக உள்ளது. சாதி வடிவமைப்பானது, அடிப்படை சேவைகளுக்கான அணுகலை எவ்வாறு வடிவமைக்கிறது என்பதைப் புரிந்துகொள்ளவதற்காக, பாதுகாப்பான வாழ்வாதார ஆராய்ச்சிக் கூட்டிணைப்பின் (Secure Livelihoods Research Consortium (SLRC) நிதியுதவி மூலமாக, வறுமை ஆராய்ச்சி நிலையமானது (Center for Poverty Analysis - CEPA) யாழ்ப்பாணத்திலுள்ள இரண்டு ஒடுக்கப்பட்ட சாதி குடியிருப்புக்களில் ஆய்வொன்று நடாத்தப்பட்டது.

இரண்டு கட்டங்களாக நடாத்தப்பட்ட ஆய்வுமுறையில், சமூக உறுப்பினர்கள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் சேவை வழங்குனர்களுடன் முறையற்ற கலந்துரையாடல்கள் மற்றும் அவதானிப்புகளால் இணைக்கப்பட்ட உப கட்டமைப்பு நேர்காணல்கள் உள்ளடங்கியிருந்தன. ஒருவருடைய குடியிருப்பு மற்றும் சாதி அடையாளம் போன்றவற்றுக்கிடையில் ஒரு பலமான தொடர்பு இருப்பது ஆய்வின் மூலம் கண்டறியப்பட்டது. வறுமையிலிருந்து விடுபடுவதற்கு, சமூகத்தின் "இயலாமை" எனும் தவறினை எடுத்துக்காட்ட அரச அதிகாரிகள் வறுமைக் கலாசாரத்தின் கோட்பாடொன்றினை முன்வைத்த அதேசமயத்தில், தலைமுறைகளுக்கிடையே முன்னேற்றத்தினை தடுக்கக்கூடிய, சமூகத்தால் முனைப்போடு உணரப்பட்ட கட்டமைப்பு ஏற்றத்-தாழ்வுகள் தொடர்பான ஒரு புரிந்துணர்வும் கூட இருந்தது. குடிநீரினைப் பெற்றுக்கொள்வது முக்கிய பிரச்சினையாக இல்லாதிருந்த போதிலும், கழிப்பறை வசதிகளை பெற்றுக்கொள்ளமுடியாததால் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் ஆகியோர் திறந்தவெளியினை பயன்படுத்த வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டனர். அதேபோல, பாடசாலை பங்குபற்றுதல் போதுமானதாக இருந்த போதிலும், பாடசாலை அனுபவம் மோசமானதாக இருந்ததுடன் பலருக்கு சிறந்த தரமான பாடசாலையினை அணுகமுடியாதிருந்தது. எனவே, சாதி அடையாளம் மற்றும் வசிப்பிடம் ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பானது இவ்விருகு-டியிருப்புக்களின் சுகாதாரம் மற்றும் கல்வி வசதிகளை அணுகுவதை தீர்மானிக்கின்றது. ஏனைய சமூகங்களும் அடைந்துகொள்ளும் வகையில், அவ்விருகுடியிருப்புகளும் அடிப்படை சேவைகளை பெற்றுக்கொள்ளுவதை உறுதிசெய்வதற்காக, ஒடுக்கப்பட்ட சாதிகள் ஆக்கிரமித்துள்ள நிலப்பகுதிகளுக்கான சட்ட ஆவணங்களை பெற்றுக் கொடுப்பதில் அரசாங்கமும், உள்ளூர் அதிகாரி-களும் இப்பிரச்சினை தொடர்பில் கவனம் செலுத்துவது மிகவும் முக்கியமாகும்.

## அறிமுகம்

2009ஆம் ஆண்டு யுத்தம் முடிவடைந்ததிலிருந்து, அடிப்படை சேவைகளுக்கான அணுகலானது குறிப்பாக யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்குப் பிரதேசங்களில் குறைந்தளவான கவனத்தினையே பெற்றது. அடிப்படை தேவைகள் எனக் கருதப்படும் நீர், சுகாதாரம் மற்றும் கல்வி போன்ற சேவைகள் இப்பிராந்திய மக்களுக்கு எவ்வாறு வழங்கப்படுகின்றது மற்றும் பெற்றுக்கொள்ளப்படுகின்றது தொடர்பாக மிக குறைவாகவே அறியப்பட்டுள்ளது. பாரம்பரியமாக ஒடுக்கப்பட்ட மக்களுக்கிடையே சேவைகளை வழங்குதல் மற்றும் அணுகுவதில் சாதி அடிப்படையிலான பாகுபாட்டினை காட்டுவது இவ்விடத்திற்கு மேலும் சிக்கலை ஏற்படுத்துகின்றது. இத்தகைய நுணுக்கங்களை புரிந்துகொள்வது மிகவும் முக்கியமானது. ஏனெனில், தரமான சேவை வழங்கலினை பெற்றுக்கொள்வது பற்றாக்குறையாக இருப்பதால், பாதுகாப்பான மற்றும் நெகிழ்திறன் வாய்ந்த வாழ்வாதாரங்களை உருவாக்குவதற்கு மற்றும் நீண்டகாலமாக ஒடுக்கப்படுதல் மற்றும் நீண்டகால வறுமையினை வலுப்படுத்துவதற்கான பெண்கள், ஆண்கள் மற்றும் குழந்தைகளின் திறனை தடுக்கமுடியும்.

இலங்கையில் சாதி அடிப்படையிலான பாகுபாடானது, 1957ஆம் ஆண்டு சமூக குறைபாடுகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரிய ஒருகுற்றமாக இருக்கின்ற அதேவேளை, சாதி தொடர்பான கலந்துரையாடல்கள் ஒரு முக்கியமான விடயமாகவே இருந்து வருகின்றன. சாதி பெரும்பாலும் கண்ணுக்கு புலப்படாததாக இருப்பதோடு பொது உரையாடல்களுக்கிடையில் அக்கறையுடைய ஒரு விடயமாக அரிதாகவே கலந்துரையாடப்படுகின்றது. காரணங்கள் வேறுபட்டாலும், பிரித்தானிய நிர்வாகத்தில் மக்கள் தொகை கணக்கெடுப்பின் மூலம் ஏற்றுக்கொள்ளப்பட்ட பரந்த இன அடையாளங்களின் படி சாதி முறையானது அதிகரிக்கின்றது என்ற உண்மையை உள்ளடக்கியுள்ள தோடு இந்நிலையானது இன்னும் தொடர்கின்றது. அதாவது, அரசியல் ரீதியான உணர்வினை தூண்டும் மற்றும் பகிரங்கமாக கையாளுவதற்கு தடைசெய்யப்பட்ட ஒன்றாக கருதப்படுகின்ற சிங்கள மற்றும் தமிழ் தேசியவாத உரையாடல்களால் சாதியானது மேலும் கூடுதலாக மேம்படுத்தப்படுகின்றது. சாதி அடிப்படையிலான பாகுபாடு குறித்து எந்தவித உறுதியான நடவடிக்கைகளும் இல்லாததால், இலங்கை நலன்புரி அரசு மற்றும் அது கல்வி, சுகாதாரத்திற்கான இலவச அணுகலாக இருப்பதால் சமூக குறைபாடுகளை குறைக்க அல்லது ஒழிப்பதற்கு இத்தகைய நடவடிக்கை தேவை என இது வாதிடுகின்றது.

சாதி மேலும் முக்கியமானது என்பதை புரிந்துகொள்ள, யாழ்ப்பாணத்திலுள்ள இரண்டு ஒடுக்கப்பட்ட குடியிருப்புகளில் சாதி வடிவமைப்பானது, அடிப்படை சேவைகளுக்கான அணுகலினை எவ்வாறு வடிவமைக்கிறது என்பதை வறுமை ஆராய்ச்சி நிலையத்தின் ஒருகற்கையானது ஆராய்கின்றது.

## அணுகுமுறைகள்

இரண்டு கட்டங்களில் நடாத்தப்பட்ட இந்த ஆய்வானது விரிவான துறைரீதியான ஆராய்ச்சியில் ஈடுபட்டுள்ளது. ஆரம்ப கட்டத்தில் இந்த ஆய்வினை மேற்கொள்வதற்காக, யாழ்ப்பாண நகரத்திற்கு அருகிலுள்ள போதிய வசதிகளற்ற ஒருகுடியிருப்பு தெரிவு செய்யப்பட்டிருந்தது. 2013 செப்டம்பர் மற்றும் 2014 ஜனவரி என்ற மூன்று மாத காலப்பகுதியின் போது தரவுகள் சேகரிக்கப்பட்டன. சமூகத்திலுள்ள ஆண், பெண் மற்றும் குழந்தைகள், பிரதேச மற்றும் மாவட்டமட்டத்திலான சிரேஷ்ட அரச அதிகாரிகள், மற்றும் ஏனைய சேவைவழங்குனர்களுடன் மொத்தமாக 45 அரை-கட்டமைக்கப்பட்ட நேர்காணல்கள் நடாத்தப்பட்டன. மேலும், ஆய்வாளர்கள் சமூகத்தினை ஒருவழக்கமான அடிப்படையில் சந்தித்ததிலிருந்து, நீர் மற்றும் சுகாதாரவசதிகளை பெற்றுக்கொள்வதற்காக மேற்கொண்ட அன்றாட பேச்சுவார்த்தைகளின் அவதானிப்புகளுடன் மற்றும் சமூக உறுப்பினர்களுடன் முறைசாரா கலந்துரையாடல்களையும் கூடமேற்கொண்டிருந்தனர். இதில் மக்கள் என்ன கூறினார்கள் மற்றும் என்ன செய்தார்கள் என்பதை ஒப்பிடுவதற்கும், வேறுபடுத்திபார்ப்பதற்கும் ஆய்வாளரை அனுமதித்தது.

அச்சுவேலி அச்செளு எனும் பிரதேச பிரிவிலுள்ள ஒரு கொலணி குடியிருப்பானது தேர்ந்தெடுக்கப்பட்டு அதே அணுகு முறையானது இண்டாவது கட்டத்தின் போதும் பயன்படுத்தப்பட்டது. மொத்தமாக 31 அரை-கட்டமைக்கப்பட்ட நேர்காணல்களானது 14 நாட்களாக நடாத்தப்பட்டது. நேர்காணல்கள் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தகவல்களை நிறைவுசெய்வதற்கு, அவதானிப்புகள் மற்றும் முறைசாரா கலந்துரையாடல்களும் மேற்கொள்ளப்பட்டன.

## முடிவுகள்

பொதுவாக, பிரதேசம் மற்றும் வாழ்வாதாரங்கள் குறிப்பாக, பாரம்பரியமாக சாதி அடிப்படையிலான ஆக்கிரமிப்புகளில் தொடர்ந்து ஈடுபடுபவர்கள் மத்தியில் வலுவான சாதி பிணைப்பு இருப்பதாக கண்டறியப்பட்டது. அதேபோல, இந்த சமூகங்களில் இது போன்ற சமூகங்களில் பரவுகின்ற வறுமையை ஒரு உள்ளார்ந்த வாழ்க்கை முறையாகக் கொண்ட வறுமையின் கலாசாரம் மற்றும் வறுமையிலிருந்து விடுபடுவதற்கு அவர்களுக்கான சவாலாக இருத்தல் ஆகிய இரண்டு வழிகளில் தற்போது வறுமை நிலவி வருவதை அரச அதிகாரிகள் மற்றும் சேவைவழங்குனர்கள் கண்டறிந்துள்ளனர். மேலும் முக்கியமாக, சமூகத்தில் தலைமுறைகளை கடந்துவறியவர்களாக இருப்பதற்கு காரணமாகின்ற நிலஉரிமையாளரின் பற்றாக்குறை, மோசமான வீடமைப்பு மற்றும் மோசமான தரமுடைய சேவைகள் போன்ற பல்வேறு கட்டமைக்கப்பட்ட அநீதிகளின் கீழ் சமூகமானது சிக்கியுள்ளது.

குடியிருப்புகளுக்கிடயே குடிநீரைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருப்பதன் காரணமாக, அன்மைய சமூகங்களை சார்ந்திருக்க வேண்டிய நிலை முடிவுக்கு கொண்டுவரப்படுகின்ற அதேவேளை, குடிநீரைப் பெற்றுக்கொள்ளக்கூடிய சில இடங்கள் சாதி கோட்டிற்கான நடுநிலையாக தொடர்ந்தும் இருந்து வருகின்றன. இரு குடியிருப்புகளிலும் கழிவறைகள் இல்லாததால் ஆண்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் திறந்த வெளியை பயன்படுத்தும் நிலைக்குதள்ளப்பட்டுள்ளனர். நிலத்திற்கான எவ்விதமான உரிமைப்பத்திரங்களும் இல்லாததால், குறிப்பிட்ட ஆவணங்கள் தேவைப்படுகின்ற உதவிகளை மக்களால் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது.

இரண்டாம் நிலை கல்விமட்டத்தில் பெண் மற்றும் ஆண் பிள்ளைகளின் தொடர்ச்சியான வெளியேற்றமானது, பாடசாலைகளுக்கான அணுகலானது முற்றிலும் சேர்வின் மீது மட்டுமல்லாது பாடசாலையின் அனுபவத்தினைக் கொண்டு கூட அளவிடப்படவில்லை என்பதை வலியுறுத்துகின்றது. தரம் ஒன்பது பரீட்சைகளில் சித்தியடையாமை, வீட்டுப் பொருளாதாரத்தில் அவர்களால் மேற்கொள்ளப்படுகின்ற பங்களிப்போடு ஒப்பிடுகின்ற போது பாடசாலையில் இருப்பதற்கான அமையச்செலவு அதிகம், கலப்பு சாதிகளைக் கொண்ட பாடசாலைகளில் சாதி அடிப்படையிலான பாகுபாட்டின் அனுபவங்கள் தொடர்பான பயம் மற்றும் மேலதிக பயிற்சி வகுப்புகளுக்கு செலவழிப்பதற்கான பெற்றோர்களின் இயலாமை போன்ற பல்வேறுபட்ட காரணங்களுக்காக பிள்ளைகள் பாடசாலையைவிட்டு வெளியேறுகின்றனர். வாழ்வாதாரம், இடம் மற்றும் பாடசாலைக் கல்வி போன்றவற்றுக்கிடையிலான தொடர்பானது, சாதி அடையாளத்துடன் நேரடியாக இணைந்திருக்கும் வசிப்பிடத்துடன் கூடிய சிறந்த தரமுடைய கல்வியினை பெற்றுக் கொள்வதை தடைசெய்கின்றது. உயர் சாதியுடன் ஒடுக்கப்பட்ட சாதி குழு தொடர்பான வர்க்க விளக்கங்களுடன் பொருந்தக் கூடிய பொதுமைப்படுத்தல்களை வகுப்பதற்காக பாடசாலை ஆசிரியர்கள் முற்பட்டதுடன் பெரும்பாலும் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் கல்விக்கு பொறுப்பேற்பதில்லை எனக் கருதப்பட்டனர். குறிப்பிட்ட பிரதேசங்களில் இருந்து வருகின்ற மாணவர்களுக்கு சேவையாற்றுவதாக இருந்தால், பாடசாலைகளும் கூட வகுப்பு மற்றும் சாதி அடையாளம் ஒன்றினை பெற்றுக்கொள்கின்றன.

## முடிவுரை

ஒருவர் குறிப்பாக சுத்திகரிப்புத் தொழிலில் ஈடுபடுபவர்களுக்கு மத்தியில் தரமான கல்வியின் அணுகலினை தீர்மானிப்பதில் தொடர்ந்தும் சாதி அடையாளமானது ஒரு பங்கினை வகிக்கின்றது. இடம் மற்றும் சாதி ஆகியவற்றுக்கிடையிலான தொடர்பானது குறிப்பாக நில உரிமைகளற்ற மக்களுக்கான சேவைகளை அணுகுவதற்கு அடித்தளமாக அமைகின்றது. ஒதுக்கப்பட்டுள்ள ஒடுக்கப்பட்டசாதிக் குழுக்கள் குறிப்பாக தனியாக வாழ்கின்ற வயதான பெண்கள் ஆகியோரையும் சேர்த்து வகுப்பு மற்றும் பாலினம் போன்றனவும் கூட அடையாள குறியீடுகளாகும்.

# விளைவுகள் மற்றும் பரிந்துரைகள்

இலங்கை நலன்புரி அரசினால் உலகளாவிய ரீதியாக கல்வி, நீர் மற்றும் சுகாதாரவசதிகள் போன்ற அடிப்படை சேவைகளுக்கான அணுகலானது நோக்கப்படுகின்றது. விடய ஆய்வுகள் சுட்டிக்காட்டினாலும், இத்தகைய சேவைகளை பெற்றுக்கொள்வதில் சாதி அடையாளமானது தொடர்ந்து சில ஒடுக்கப்பட்ட சாதிகளுக்கு ஒரு தடையாக இருக்கின்றது. இத்தகைய தாழ்ந்த சாதி குழுக்கள் அதே அளவான சேவைகளைப் பெற்றுக்கொள்வதை உறுதிசெய்யும் வகையில், குறிப்பிட்ட பரிந்துரைகள் முன்மொழியப்பட்டுள்ளன:

- ஆசிரிய பயிற்சி அமர்வுகளில் சாதி அடிப்படையிலான பாகுபாடு தொடர்பான கலந்துரையாடல்களை ஒருங்கிணைத்தல். பாடசாலைகளில் சாதி அடிப்படையிலான பாகுபாடுகளின் இயல்பு மற்றும் பாதிப்பு தொடர்பான கண்ணோட்டம் மற்றும் விரிவான பார்வையினை பெற செயலமர்வுகளானது கல்வி அமைச்சினால் நடாத்தப்பட வேண்டும்.

- தற்போதைய இடங்களில் திருநகரில் குடியிருப்போர்கள் பாதுகாப்பாக இருக்க வேண்டும். இதையொட்டி அவர்களுக்கு கழிவறைகளை அமைப்பதற்கு அல்லது குடியிருப்பிற்கான தேவைப்படும் ஆதாரங்களை பெறுவதற்கான உதவியினை அணுகுவதற்கு அனுமதியினை வழங்க வேண்டும்.

- இரண்டு குடியிருப்புகளிலும் கழிப்பறைகளின் பற்றாக்குறையை மதிப்பிடுதல். இது குறிப்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பு மற்றும் கௌரவத்தினை உறுதிசெய்ய உதவும்.

வறுமை ஆராய்ச்சி நிலையமானது (Center for Poverty Analysis-CEPA), வறுமை தொடர்பான அபிவிருத்தி விடயங்களில் ஒரு சிறந்த புரிந்துணர்வை தருகின்ற இலங்கையின் சுயாதீனமான ஆய்வு அமைப்பாகும். வறுமை என்பதொரு அநீதியாகும் அது இல்லாதொழிக்கப்பட வேண்டியதே என்பதை தனது ஆய்வின் முடிவுகளை முற்படுத்தி வலியுறுத்துவுதோடு வறுமை ஒழிப்பானது கொள்கை மாற்றம், தேசிய மற்றும் சர்வதேச ரீதியான நடைமுறைகள் போன்றவற்றை உள்ளடக்குகிறது, அதேபோல் வறுமையில் வாடுகின்ற மக்கள் தொடர்பாகவும் கவனம் செலுத்துகின்றது. தேசிய ரீதியாக, பிராந்திய ரீதியாக, துறை ரீதியாக, நிகழ்ச்சிதிட்டம் மற்றும் திட்ட அளவில் வறுமையோடு தொடர்புடைய அபிவிருத்தி கொள்கையில் செல்வாக்கு செலுத்துவதில் பங்களிப்பு செய்வதற்கு வறுமை ஆராய்ச்சி நிலையம் முயற்சிக்கின்றது.

ஐரிஷ் உதவி மற்றும் ஐரோப்பிய ஆணையம் போன்றவற்றின் இணை நிதியுதவியுடன் ஐக்கிய இராச்சியத்தின் சர்வதேச மேம்பாட்டுத் திணைக்களத்தால் (DFID) வழங்கப்பட்ட நிதயுதவியின் மூலமாக பாதுகாப்பான வாழ்வாதார ஆராய்ச்சி கூட்டமைப்பினால் இந்த விளக்கப்படம் உருவாக்கப்பட்டது. இந்த வெளியீட்டில் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் அனைத்தும் நூலாசிரியர்(கள்) உடையது என்பதுடன் இங்கிலாந்து அரசின் கொள்கைகளை பிரதிபலிக்கவோ அல்லது பாதுகாப்பான வாழ்வாதார ஆராய்ச்சி கூட்டமைப்பின் அல்லது ஏனைய பங்குதாரர் அமைப்புக்களை பிரதிபலிக்கவோ மாட்டாது.

Centre for Poverty Analysis
29, R. G. Senanayake Mawatha, Colombo 7, Sri Lanka.
Tel : +94 11 469 0200, 2676955 Fax : +94 11 2676959 E-mail : info@cepa.lk

www.cepa.lk https://www.facebook.com/CepaSL/ https://twitter.com/cepaSL https://www.youtube.com/cepasl